www.Padasalai.Net

கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 2909/அ5/2024 நாள். .09.2024

பொருள்: பள்ளிக்கல்வி - கடலூர் மாவட்டம் - 2024-2025 ஆம் கல்வியாண்டு - காலாண்டுத்தேர்வு - 28.09.2024 முதல் 06.10.2024 வரை விடுமுறை முடிந்து 07.10.2024 அன்று பள்ளித் திறக்க அறிவிப்பு- தொடர்பாக.

பார்வை: சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 52909/எம்1/இ1/2024 நாள். 25.09.2024.

---

கடலூர் மாவட்டத்தில் 2024-2025 ஆம் கல்வியாண்டு, அனைத்து பள்ளிகளுக்கும் 28.09.2024 முதல் 06.10.2024 வரை காலாண்டுத் தேர்வு விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடுமுறை நாட்களில் மாணவர்களுக்கு எவ்வித சிறப்பு வகுப்புகளும் நடத்தக்கூடாது என தெரிவிக்கப்படுகிறது. 07.10.2024 அன்று பள்ளித் திறப்பதற்கு முன்னதாக பள்ளித் தலைமையாசிரியர்கள் பள்ளி வளாகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பள்ளித் திறக்கும் நாளன்றே அனைத்து மாணவர்களுக்கும் திருத்திய விடைத்தாட்களை வழங்க தலைமையாசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர்.

பெறுநர்
அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்,
கடலூர் மாவட்டம்.

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர்கள், (தொடக்கக்கல்வி/இடைநிலை/ தனியார் பள்ளிகள்),
கடலூர் மாவட்டம்